


**29. 06. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **சுகாதாரம் முதல் சமூக பாதுகாப்பு வரை அனைத்து** துறைகளிலும் நாடு முன்னேற்றமடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. **தரவுகளும், புள்ளி விவரங்களும் சிறந்த** நிர்வாகத்திற்கு இன்றியமையாதது என்று மத்திய இணையமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.

3. **தமிழ்நாட்டில் வீடுகளுக்கான மின்** கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று மாநில மின்துறை அமைச்சர் திரு.**S.S.**சிவசங்கர் தெளிவுப்படுத்தி உள்ளார்.

4. **பள்ளி வளாகங்களுக்கு அருகே** கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

5. **US ஓப்பன்** பேட்மிட்டன் ஆடவர், மகளிர், ஒற்றையர் இறுதி ஆட்டங்களில் இன்று நள்ளிரவு தன்விஷர்மாவும் ஆயுஷ்ஷெட்டியும் களமிறங்குகின்றனர்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**மன் கி பாத்**

**சுகாதாரம் முதல் சமூக பாதுகாப்பு வரை அனைத்து** துறைகளிலும் நாடு முன்னேற்றமடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 123-வது முறையாக இன்று உரையாற்றிய அவர், மக்கள் தொகையில் 64 சதவிகிதத்திற்கும் மேற்பட்டோர் மத்திய அரசின் ஏதேனுமொரு சமூக பாதுகாப்பு சலுகைகளின் மூலம் பயனடைந்து வருவதாக கூறினார்.

இந்தியாவை ட்ரக்கோமா கண்நோய் இல்லாத நாடாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர், தூய்மை இந்தியா, ஜல்ஜீவன் உள்ளிட்ட இயக்கங்களின் முன்னெடுப்புகளால் இது சாத்தியமாகி உள்ளதாக கூறினார்.

**நாட்டில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டு** 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை சுட்டிக்காட்டிய பிரதமர், ஜனநாயகம் அரசியலமைப்பை ஸ்திரத்தன்மையுடன் இருக்கச் செய்வதாக கூறினார்.

அவசர நிலையை எதிர்த்து போராடிய அனைவரையும் நாடு என்னெற்றும் நினைவில் கொள்ளும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

**உலகம் முழுவதுமுள்ள கோடிக்கணக்கான மக்கள்** யோகப்பயிற்சியை தங்களது அன்றாட வாழ்வியல் முறையாக ஏற்றுக்கொண்டு வருவதாக எடுத்துரைத்த பிரதமர், **ஒரே பூமி ! ஒரே ஆரோக்கியத்திற்கான யோகா!** என்ற கருப்பொருளில் கடந்த 21-ம் தேதி நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகள் **"உலகம் ஒரே குடும்பம்"** என்ற தத்துவத்தை நோக்கி நம்மை கொண்டு செல்வதாக குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் யோகா தின நிகழ்ச்சிகள் எழுச்சியுடன் நடைபெற்றதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

**கைலாஷ் மானசரோவர், அமர்நாத், பூரி ஜெகந்நாதர்** உள்ளிட்ட பல்வேறு புனித யாத்திரைகள் ஒரே பாரதம்! உன்னத பாரதம் ! என்ற உணர்வின் பிரதிபலிப்பாக விளங்குவதாக கூறிய பிரதமர், மக்களிடையே சேவை மனப்பான்மை மேம்படுவதற்கு புனித பயணங்கள் வழிகோலுவதாக தெரிவித்தார்.

**அஸாம் மாநிலம் போடோலாந்து தற்போது** விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்து வருவதாக குறிப்பிட்ட பிரதமர் அம்மாநிலத்தில் 70 ஆயிரம் வீரர்களை கொண்ட,
3 ஆயிரத்து 700-க்கும் மேற்பட்ட கால்பந்தாட்ட அணிகள் உருவாகி உள்ளதாகவும், இதில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

**நாட்டின் பிராந்திய, மொழியியல் மற்றும் கலாச்சார** பன்முகத் தன்மையை சுட்டிக்காட்டிய பிரதமர், கலை மற்றும் கைவினை பொருட்கள் இதற்கு சிறந்த உதாரணமாக திகழ்வதாக கூறினார்.

**மேகாலயாவில் புவிசார் குறியீடு பெற்றுள்ள** பட்டுப்புழுக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுத்தாத, அஹிம்சா பட்டு ரகங்கள், அப்பகுதி மக்களின் பாரம்பரியத்தை பறைசாற்றுவதாக கூறினார்.

இவ்வகை பட்டுத்துணிகளின் தேவை உலகளவில் அதிகரித்து வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

**நாட்டின் புதிய எதிர்காலத்தை உருவாக்க பெண்கள்** சக்தி தயாராகவுள்ளதாக கூறிய பிரதமர், தெலங்கானாவில் விவசாய பணிகளை மட்டுமே மேற்கொண்டு வந்த பெண்கள் திணைப்பயிர்களிலிருந்து ரொட்டிகள் தயாரிக்கும் பணியில் தற்போது ஈடுபட்டிருப்பதாக கூறினார்.

காளான் வளர்ப்பு, சானிடரி நாப்கின் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பெண்கள் ஈடுபட்டு, வருமானம் ஈட்டி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

**பகவான் புத்தரின் எண்ணங்கள் நாடுகளின்** கலாச்சாரங்களையும், மக்களையும் ஒருங்கிணைக்கும் சக்தி கொண்டவை என்று கூறிய பிரதமர், இந்தியாவிலிருந்து வியட்நாமிற்கு கொண்டுசெல்லப்பட்டு 9 இடங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தரின் நினைவுச் சின்னங்களை ஒன்றரை கோடி பேர் தரிசனம் செய்ததாக கூறினார்.

**உலக சுற்றுச்சூழல் தினம் கடந்த 5-ம் தேதி** கொண்டாடப்பட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர், அன்னையின் பெயரில் மரம் நடுவோம் இயக்கத்தின் கீழ் நாட்டில் கோடிக்கணக்கான மரங்கள் நடப்பட்டுள்ளதாக கூறினார்.

மேலும் மரங்கள், பூங்காக்கள் ஆகியவை பறவைகள், விலங்கினங்களுக்கு நலம் பயப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

நம் அன்றாட வாழ்வின் சிறிய பழக்கவழக்கங்கள் பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

**மருத்துவர்கள் தினமும், பட்டய கணக்காளர்கள்** தினமும் நாளைமறுநாள் கொண்டாடப்படுவதை எடுத்துரைத்த பிரதமர், அவர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

❖❖❖❖❖❖

**புள்ளியியல் தினம்**

**தரவுகளும், புள்ளி விவரங்களும் நல்ல** நிர்வாகத்திற்கு இன்றியமையாதது என்று மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.

19-வது தேசிய புள்ளியியல் தினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், முறையான கணக்கெடுப்புகளை செயல்படுத்துவதன் மூலம் நாட்டின் புள்ளி விவர அமைப்புகளின் திறன் வெளிப்படுவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தேசிய மாதிரி கணக்கெடுப்பின் 75 ஆண்டுகளை நினைவுக்கூறும் வகையில் நினைவு நாணயம் மற்றும் தபால் தலையையும் அமைச்சர் வெளியிட்டார்.

புள்ளியியல்துறை பேராசிரியர் **பிரசாந்த சந்திர மஹலனோபிஸின்** பிறந்தநாளை நினைவுகூறும் வகையில் ஆண்டுதோறும் இந்நாள் கடைபிடிக்கப் படுகிறது.

தேசிய மாதிரி கணக்கெடுப்பின் 75 ஆண்டுகள் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

❖❖❖❖❖❖

**சிவசங்கர்**

**தமிழ்நாட்டில் வீடுகளுக்கான** மின்கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. **S.S.** சிவசங்கர் தெளிவுப்படுத்தி உள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மின்கட்டணங்கள் உயர்த்தப்படுவதாக சமூக வலைதளங்களில் வெளியான வதந்திகளை மக்கள் நம்பவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

தற்போது வழங்கப்படும் 100 யூனிட் இலவச மின்சாரம் உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ்**

**பள்ளி வளாகங்களுக்கு அருகே சமூக விரோத** செயல்களை தடுக்கும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுப்பவர்கள் தொழில்நுட்ப உதவியுடன் கண்டறியப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

**சக்கரபாணி, சேகர்பாபு**

**பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலில் நாள்** முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டத்தை மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், இத்திட்டத்தின் கீழ் நன்கொடை வழங்க விரும்பும் பக்தர்கள் நாள் ஒன்றிற்கு 25 ஆயிரம் ரூபாய் செலுத்தி தங்களது விசேஷ தினங்களை கொண்டாடலாம் என்று கேட்டுக்கொண்டார்.

**.. வாய்ஸ் ..**

**இதேபோல்** மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவிலில் இத்திட்டத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு, நங்கநல்லூர் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவில், பெரியபாளையம்

அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவில் உள்ளிட்ட 5 திருக்கோவில்களில் இன்று இத்திட்டம் தொடங்கப்படுவதாக கூறினார்.

**இந்நிகழ்ச்சியில்** பேசிய குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் சமயபுரம், சிறுவாபுரி, திருத்தணி, வயலூர் உள்ளிட்ட 19 திருக்கோவில்களுக்கு ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வரைவுப்பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

வரும் 8-ம் தேதி நடைபெறவுள்ள திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகத்திற்கு வரும் பக்தர்களுக்கு தேவையான போக்குவரத்து மருத்துவம், குடிநீர், பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை பல்வேறு துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**கே.என்.நேரு**

**நெல்லை, நெல்லையப்பர் காந்திமதி அம்பாள்** திருக்கோவில் தேரோட்டம் வரும் 8-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் இதற்கான அனைத்து முன்னேற்பாட்டு பணிகளும் நடைபெற்று வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

பாளையங்கோட்டையில் ஆயிரத்து 231 மாற்றுத் திறனாளிகளுக்கு 98 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியஅவர், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரியில் வரும் 5-ம் தேதி மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக கூறினார்.

இதனை வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖

**தமிழக அரசு**

**சுதந்திர போராட்ட தியாகிகள்** மற்றும் தமிழ்மொழி வளர்ச்சிக்காக பாடுபாட்ட அறிஞர்கள் மற்றும் தலைவர்களை போற்றும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் 11 மணி மண்டபங்கள், 12 அரங்குகள், தியாகிகளின் திருவுருவச்சிலைகள் உள்ளிட்டவைகள் அமைக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**MBBS BDS**

**தமிழகத்தில் அரசு மற்றும் தனியார்** மருத்துவ கல்லூரிகளில் **MBBS BDS** உள்ளிட்ட படிப்புகளுக்கு விண்ணப்பிக்க இன்று கடைசிநாளாகும்.

36 அரசு மருத்துவக்கல்லூரிகள் மற்றும் **ESI** கல்லூரிகளில் உள்ள 5 ஆயிரத்து 200 மருத்துவ இடங்களும்,

தனியார் கல்லூரிகளில் உள்ள 3 ஆயிரத்து 450 மருத்துவ இடங்களும் நிரப்பப்படவுள்ளன.

கடந்த 5-ம் தேதி தொடங்கிய விண்ணப்பதிவு காலஅவகாசம் மாணாக்கரின் கோரிக்கையை ஏற்று இன்றுவரை நீட்டிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖

**குறைதீர்க்கும் முகாம்**

**திருச்சி ஆயுதபடை மைதானத்தில் முப்படை** ஓய்வூதியதாரர்களுக்கான மாபெரும் குறைதீர்க்கும் முகாம் நாளை நடைபெறுகிறது.

இம்முகாமை தமிழகம் முழுவதும் உள்ள பாதுகாப்பு படை ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் திரு.ஜெயசீலன், தெரிவித்துள்ளார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**மேட்டூர்**

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று** 119 அடியாக அதிகரித்துள்ளது.

மாலைக்குள் அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்ட வாய்ப்புள்ளதாக நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**அமெரிக்காவில் நடைபெறும் US ஓப்பன்** பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் இந்தியாவின் தன்வி ஷர்மா - சீனாவின் **Beiwen Zhang** ஐ இன்று நள்ளிரவு எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி – கனடாவின் பிரையன் யாங்குடன் மோதுகிறார்.

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**விம்பிள்டன் கிராண்ஸ்லாம் டென்னிஸ்** போட்டிகள் லண்டனில் நாளை தொடங்குகின்றன.

வரும் 13-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் முன்னணி வீரர்களான நோவாக் ஜோக்கோவிச், சின்னர், அல்கராஸ், பெட்ரா க்விக்டோவா, எலினா, ஸ்விட்டோலினா உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖